

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு அருப்புக்கோட்டை அருகே ஆத்திப்பட்டியில் நடைபெற்ற விழாவில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் வழங்கினார்.



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே மல்லாங்கிணறு அரசு மேல்நிலைப் பள்ளியின் சார்பில் மல்லாக்கினார் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பனை விதைகள் மற்றும் நிழல் தரும் மரக்கன்றுகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நட்டினர். உடன் ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் தங்க தமிழ்வாணன், வர்த்தக அணி போஸ், மாவட்ட கவுன்சிலர் பாலச்சந்தர், காரியாபட்டி நகர செயலாளர் ஆர்.கே.செந்தில், மல்லாங்கிணறு நகர செயலாளர் முருகேசன், பேரூராட்சி தலைவர் துளசிதாஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதி பங்களா என்ற காட்டு எமனேஸ்வரத்தை சேர்ந்த அ.தி.மு.க., நிர்வாகிகள் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வில் கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி. வாசுதேவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், வெம்பூரில் ரூ.17.10லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கான பணியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி தினகரன், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், ஒன்றிய அவைத் தலைவர் பொன்ராஜ், வடக்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் லட்சுமணன், வடக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அழகுராஜ், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன், உள்ளிட்ட, கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் தேசிங்குராஜா ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவற்றோர் இல்லத்தில் மதியம் உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுகுமாரன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.புதூர் கிராம பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 15வது நிதிக்குழு மானியம் (சுகாதாரம் நிதி திட்டம் 2025–2026 ன் கீழ் கட்டப்படவுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணிக்கு – 29.11.2025 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணியை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்ட நியாயவிலை கடை கட்டிடத்தினை பண்டாரசெட்டிஞ்விலையில் தமிழக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு அரிசி பருப்பு பொருட்களை வழங்கினார் உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை. மூ. ராமஜெயம், துணை அமைப்பாளர் மணல்மேடு சுதாகர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி பி.செந்தில் குமார், ஒன்றிய செயலாளர் டி.பி. பாலசிங், ரவி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மு.பாக்கியமணி தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்து கூறினார். நிகழ்வில் ஐ.கேட்சன், மோ.பிராங்கிளின், பிரபா ஜி.ராமகிருஷ்ணன், அருள்தாஸ், ந.இராமதாஸ், விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துனை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான 27,11,2025 அன்று இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் பெயரில் தொண்டி பேரூர் கழக சார்பில் பேரூர் கழக செயலாளர் எம்.எம். இஸ்மத் நானா தலைமையில் தொண்டி புதிய பேருந்து நிலையம் மற்றும் பாவோடி பகுதியில் ஏழை எளியோருக்கு பிரியாணி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அப்பாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார் ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு நல திட்டம் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். உடன் சின்னமனூர் நகராட்சி தலைவர் அய்யம்மாள், மாவட்ட அமைத் தலைவர் மனோகரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம், இளைஞர் அணி முத்துக்குமரன், சின்னமனூர் நகர இளைஞரணி அமைப்பாளர் செல்லப்பாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.